II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**MCOP. No. 244 of 2022**

Deposition of witness for the Petitioner / PW 2
solemnly by Thiru.K.Palanikumar, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 10.09.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Sivakumar | Caste | : | |
| Father's / Husband's Name | : | | Calling | : | |
| Age | : | | Religion | : | |
| Village | : | | Taluk | : | |

முதல் விசாரணை=

நான் இந்த வழக்கின் விபத்தை கண்ணுற்ற சாட்சியாவேன். இன்று மா.சா.2 ஆக என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் உள்ள விவரங்கள் உண்மையானவை என நேரில் அறிந்து கையெழுத்திட்டுள்ளேன். எனது ஆதார் அட்டை நகலை Ex.X1 ஆக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை=

நான் விபத்தில் இறந்த சதீஷ்குமார் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தில் பின்புறம் அமர்ந்து சென்றுகொண்டிருந்தேன். பேருந்து எங்கள் பின்புறமாக வந்து மோதியது. எனக்கு சொற்ப காயங்கள் தான் ஏற்பட்டது. வாகனத்தை ஓட்டியவர் விபத்தில் இறந்துள்ள நிலையில் எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லையா என்றால் சொற்ப காயங்கள் தான் ஏற்பட்டது. நான் சதீஷ்குமாரோடு வண்டியில் பயணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. இறந்த சதீஷ்குமார் தானகவே பக்கவாட்டில் விழுந்து பேருந்தில் மோதி காயங்களை ஏற்படுத்தி கொண்டார் என்றும் பேருந்து அவர் மீது மோதவில்லை என்றாலும் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.